Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

TUESDAY, JANUARY 21, 2025

செவ்வாய்க்கிழமை, 21 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 141 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தடைசெய்யப்பட்ட 21 நிறுவனங்கள்

தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டத்தை வழி நடத்தும் 21 நிறுவனங்களின் பெயர்களை இலங்கை மத்திய வங்கி, திங்கட்கிழமை (20) வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## ஒரே நேர்க்கோட்டில் ஏழு கோள்கள் அணிவகுக்கும்

### கண்கொள்ளா காட்சியை இன்று பார்வையிடலாம்

வானில் ஏழு கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் அணிவகுத்து வரும் அதிசயம் ஜனவரி 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிகழவிருக்கிறது.

ஏழு கோள்கள் அவற்றின் சுற்றுப்பாதையில் ஒரே டிகிரிக்குள் வருவதால், அவற்றை நம்மால் காண முடியும் என்பதால் நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்கிறார்கள் வானிலை ஆய்வாளர்கள்.

தொடர்ச்சி P2

### மஹிந்தவை வெளியேற்ற

## “சதி திட்டம்”

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்ற அரசாங்கம் சதி செய்து வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது குடியிருப்புக்கு 4.6 மில்லியன் ரூபாய் வாடகை செலுத்த வேண்டும் அல்லது அதை விட்டு வெளியேற வேண்டும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

முன்னாள் ஜனாதிபதியை அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு மக்கள் அரசாங்கத்திற்கு ஆணை வழங்கவில்லை என தொலவத்த தெரிவித்துள்ளார்.

“ஜனாதிபதிகள் பொதுவாக முன்னாள் ஜனாதிபதிகளைத் தனிப்பட்ட முறையில் பழிவாங்க மாட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்ற அரசாங்கம் சதி செய்யும் அதேவேளையில், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது,” என்று அவர் கூறியுள்ளார்.



தொடர்ச்சி P2



## ‘ஸ்கை ஸ்டிக்’ வாகனத்தில் வெடித்ததால் மூவர் காயம்

டி.கே.ஜீ.கபில

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதைக்கு மேலே உயரமாகப் பறந்து கொண்டிருந்த பறவைக் கூட்டத்தின் மீது சுடப்பட்ட ‘ஸ்கை ஸ்டிக்’ வகை வெடிபொருள் வெடிக்கத் தவறி, அதிகாரிகள் பயணித்த வாகனத்தின் மீது விழுந்ததால், திங்கட்கிழமை (20) பகல் 11.45க்கு விமான நிலையத்தில் ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சீன புத்தாண்டு கொண்டாட்டம் பிரதமர் தலைமையில் ஆரம்பம்





சீன மக்கள் குடியரசின் புத்தாண்டு கொண்டாட்டத்துடன், இணைந்ததாக இலங்கையில் உள்ள சீன தூதரகம் மற்றும் சீன கலாசார மற்றும் சுற்றுலா அமைச்சு இணைந்து சீன புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கொழும்பு சினமன் லைஃப் ஹோட்டலில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



## பஸ் விபத்தில் 14 பேர் காயம்

எஸ்.கீதபொன்கலன்

காத்தான்குடியிலிருந்து சேருநுவர ஊடாக கொழும்பு நோக்கி, பயணித்த தனியார் பஸ் சேருநுவரவில் வைத்து திங்கட்கிழமை (20) அதிகாலை வீதியை விட்டு விலகியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் பயணிகள் 14 பேர் காயமடைந்த நிலையில், சேருநுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 9 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காத்தான்குடியிலிருந்து புறப்பட்ட பஸ், மன்னம்பிட்டியில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையால் திருகோணமலை,சேருநுவர ஊடாக பயணிக்க முயன்றபோது இவ்வனர்த்தம் ஏற்பட்டதாக அறிய முடிகின்றது.

## விஜயமுனிக்கு பிணை

சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைப் பயன்படுத்திப் பொருத்தப்பட்ட லொறியை வைத்திருந்த குற்றச்சாட்டில் பாணந்துறை மத்திய ஊழல் தடுப்பு பணிக்குழுவால் (PCTF) ஞாயிற்றுக்கிழமை (19) கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவுக்கு பண்டாரவளை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.



தொடர்ச்சி P2



## “அறுவடையை தடுத்தவர்கள் நட்டஈடு தர வேண்டும்”

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் விளைந்த வேளாண்மையை அறுவடை செய்யாவிடாது விவசாய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட திகதியில் தான் அறுவடை செய்ய வேண்டும் என சிலர், மனித உரிமை ஆணைக் குழுவுக்கு சென்று தடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## பிரித்தானிய பெண்ணின் கடனட்டைகளை திருடிய புத்தளத்தை சேர்ந்தவர் ஹட்டனில் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

பிரித்தானியப் பெண் ஒருவரின் கடன் அட்டைகளைத் திருடி, ஹட்டன் நகரில் உள்ள பல கடைகளில் இருந்து சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வாங்கிய சந்தேக நபர் ஒருவர் ஹட்டன் பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளத்தை சேர்ந்த 22 வயதுடைய சந்தேக நபர், ஹட்டன் மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடையில் கண்டியிலிருந்து எல்ல நோக்கி ஞாயிற்றுக்கிழமை (19) பயணித்த சிறப்பு ரயிலில் பயணித்த பிரித்தானியப் பெண்ணின் பயணப் பையைத் திருடிச் சென்றுள்ளார்.

அதன்பின்னர், சந்தேக நபர் ரயிலில் இருந்து இறங்கி ஹட்டன் நகரத்தை சென்றடைந்துள்ளார்.

இந்த நிலையில், திருடப்பட்ட கிரெடிட் கார்டுகளை (கடனட்டைகள்) பயன்படுத்தித் தங்க நெக்லஸ், ஒரு மதிப்புமிக்க மொபைல் போன் மற்றும் ஆபரணங்கள், ஆடைகள், காலணிகள் மற்றும் பல உணவுப் பொருட்களை ஹட்டன் நகரில் வாங்கியுள்ளார்.



வாங்கிய நெக்லஸ் ஹட்டன் நகரில் உள்ள ஒரு தனியார் அடகுக் கடையில் அடகு வைக்கப்பட்டு ரூ. 78,000 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார்.

எல்ல ரயில் நிலையத்திற்குப் பயணித்த ஒரு பிரித்தானியப் பெண், தனது வங்கி அட்டைகள் தொலைந்து போயுள்ளதாக எல்ல ரயில் நிலையத்தில் உள்ள சுற்றுலாத் துறை பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளார். அதன் பேரில், சுற்றுலாத் துறை பொலிஸார் இந்த விடயம் குறித்து ஹட்டன் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2




### சர்ச்சைகளுக்கு மத்தியில்

## திருவள்ளுவர் சிலை திரை நீக்கம்

பாறுக் ஷிஹான்

நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில், சர்ச்சைக்கு மத்தியில் திருவள்ளுவர் சிலை கொட்டும் அடை மழைக்கும் மத்தியில், ஞாயிற்றுக்கிழமை(19) திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

முழுச் செய்தி P5

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஒரே நேர்க்கோட்டில் ஏழு கோள்கள் அணிவகுக்கும்

வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, நெப்டியூன், யுரேனஸ் மற்றும் புதன் ஆகிய கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் அணிவகுத்து நிற்கும் அதிசய நிகழ்வானது நிகழவிருக்கிறது.

இது குறிப்பிடத்தக்க நிகழ்வாக இருப்பதற்குக் காரணம், இந்த கோள்கள் அனைத்தும் பூமியிலிருந்து வெகு தொலைவில் இருப்பது மட்டுமல்ல, அந்தக் கோள்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தொலைவுகளில் சுற்றிக்கொண்டிருப்பதும்தான்.

இவ்வாறு ஏழு கோள்களும் ஒரே நேர்க்கோட்டில் அணிவகுத்து நின்று, இரவு நேரத்தில் வானத்தில் ஓர் அழகிய அரை வட்டத்தை உருவாக்கிக் காண்பவர்களின் நினைவில் நீங்கா ஓர் அனுபவமாக இடம்பிடிக்கவிருக்கிறது. இவை எல்லாம் ஒரே நாளில் நடக்கப்போவதில்லை.

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி முதல் நிலவுக்கு மிக அருகே வெள்ளிக் கோளானது நிலைகொண்டிருக்கிறது. அதன் பிறகு, ஜனவரி 13ஆம் திகதி பௌர்ணமி நாளிலிருந்து செவ்வாய் கோளானது நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான், வெள்ளியும், சனிக் கோளும் இதுவரை இல்லாத வகையில் நெருக்கமாக வந்துகொண்டிருக்கின்றன. இவை ஜனவரி 18ஆம் திகதி முதல் மிக அருகருகே நேர்க்கோட்டில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜன. 18 முதல், மாலை வேளைகளில், இவ்விரண்டு கோள்களும் ஒரே நேரத்தில் மக்களுக்குக் காட்சியளிக்கத் தொடங்கும்.

சூரியன் மறைந்து, முழுவதும் இருள் சூழ்ந்த பிறகு உள்ளூர் நேரப்படி, இரவு 8.30 மணி முதல் பார்க்கலாம். ஆனால், வெள்ளி, சனி மற்றும் நெப்ட்யூன் கோள்கள் மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வருவதற்கு இரவு 11.30 மணி முதல் நள்ளிரவு ஆகலாம். அது அவரவர் இருக்கும் இடத்தைப் பொருத்தது. அதன் பிறகு மேலும் சில மணி நேரங்களில் செவ்வாய், வியாழன், யுரேனஸ் கோள்களும் இவற்றுடன் அணிவகுக்கும். சூரிய உதயத்துக்கு சில மணி நேரத்துக்கு முன்பு செவ்வாய் மறைந்துவிடும்.

பொதுவாகவே, ஒன்றிரண்டு கோள்கள் ஒன்றாக நெருங்கி வரும். அதனை வானில் அவ்வப்போது காணலாம். ஆனால், ஒன்றல்ல இரண்டல்ல ஏழு கோள்கள் ஒன்றாக அணிவகுத்து வருவதும், இரவு நேரத்தில் பார்க்க முடிவதும் வழக்கமான ஒன்றல்ல. அபூர்வம்தான்.அதுவும், கோடு போட்டதுபோல, ஒரே நேர்க்கோட்டில் ஏழு கோள்களும் ஒன்றாக அணிவகுப்பதும் அதிசயமே அசந்துபோகும் நிகழ்வு.

## விஜயமுனிக்கு பிணை

ரூ.200,000 சொந்த பிணையில் அவரை விடுவிக்க நீதவான், அடுத்த விசாரணையை பிப்ரவரி 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஹப்புத்தளை - முத்துவானவத்தை தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட முன்னாள் அமைச்சருக்கு சொந்தமானது என்று கூறப்படும் லொறியும், கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் பயணித்த போக்குவரத்து அமைச்சர்





போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, திங்கட்கிழமை(19) காலை மொரட்டுவையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி சென்ற அலுவலக ரயிலில் சாதாரண பயணியாக பயணித்துள்ளார்.

அமைச்சர் பயணிகளுடன் உரையாடும் புகைப்படங்கள் அடங்கிய சமூக ஊடகப் பதிவுகள், ரயில் பயணிகள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் குறித்து அவர் விவாதத்தில் ஈடுபட்டதை வெளிப்படுத்தியுள்ளது.

ஊடகங்களின் துணையின்றி நடத்தப்பட்ட இந்த அறிவிக்கப்படாத ஆய்வுப் பயணத்தின் போது, அடிக்கடி ரயில் தாமதம், மின் விசிறிகள் பழுதடைதல், மாற்றுத் திறனாளிகள் ரயில் ஏறும் போது, ஏற்படும் சவால்கள், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் உள்ள சுகாதாரமற்ற நிலை, பாதுகாப்பு அபாயத்தை ஏற்படுத்தும் பாவனைக்குப் பொருத்தமற்ற ரயில்கள் தொடர்ந்து பயன்படுத்துதல் போன்றவற்றைப் பற்றி பயணிகள் இதன்போது, கவலை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

# “சதி திட்டம்”

இதேவேளை, களுத்துறையில் ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும் அரசாங்கம் மீளப் பெற்றுக்கொள்ளும் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தின் நிலத்தின் மதிப்பைத் தவிர்த்து மாதாந்த வாடகை ரூ. 4.6 மில்லியன் என்றார். முன்னாள் ஜனாதிபதிகள் குடியிருப்பை காலி செய்யவோ அல்லது வாடகையைதாங்களேசெலுத்தவோ முடியுமென ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

“தற்போதுள்ள சட்டங்களின்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்குக் குடியிருப்பு அல்லது அவர்களது சம்பளத்தில் 1/3 பங்கு உரிமை உண்டு. அரசாங்கம் இப்போது, இந்த நன்மையை ரூ. 30,000 ரொக்க கொடுப்பனவாக மட்டுப்படுத்தும். இது அவர்களின் சம்பளத்தில் 1/3 ஆகும்” என்று கட்டுகுருந்தவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை, கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகை தவிர்ந்த அனைத்து அமைச்சு பங்களாக்களும் ஹோட்டல் திட்டங்களுக்காக அல்லது வேறு பொருத்தமான பயன்பாட்டிற்காக மீளப் பயன்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## சீன புத்தாண்டு கொண்டாட்டம் பிரதமர் தலைமையில் ஆரம்பம்

சீனப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விழா நிகழ்வில் வாசித்துள்ளார்.

புத்தாண்டு கொண்டாட்டத்துடன் இணைந்ததாக, Henan Art Troupe மற்றும் Sichuan Chef Team ஐ சேர்ந்த 34 பேர் கொண்ட தூதுக்குழுவும் இலங்கைக்கு வருகை தந்துள்ளது. ஜனவரி 20 முதல் 23 வரை “சீன உணவு விழா” மற்றும் ‘துறைமுக நகர சீன கலாசார இரவு’ நிகழ்ச்சிகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சீன கலாசார அம்சங்களால் அலங்கரிக்கப்பட்ட இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன, கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி உட்பட இலங்கையர்கள் மற்றும் சீனப் பிரஜைகள் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டுள்ளனர்.

## பிரித்தானிய பெண்ணின் கடனட்டைகளை திருடிய புத்தளத்தை சேர்ந்தவர் ஹட்டனில் கைது

ஹட்டன் பொலிஸ் நிலைய அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில், ஹட்டன் தலைமையக தலைமை இன்ஸ்பெக்டர் ரஞ்சித் ஜயசேன, பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் நுவான் மதுசங்க உள்ளிட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளனர்,

இந்நிலையில், ஹட்டனில் இருந்து எல்ல வரைக்கும், பயணிப்பதற்கு ஒருவர் வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்துவது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு ஞாயிற்றுக்கிழமை (19) இரவு தகவல் கிடைத்துள்ளது.

விரைந்து செயற்பட்ட பொலிஸார், அவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய போது, பிரித்தானியப் பெண்ணின் காணாமல் போன கிரெடிட் கார்டுகள், கிரெடிட் கார்டுகளை பயன்படுத்தி வாங்கிய பொருட்கள் மற்றும் 38,890 ரூபாய் ஆகியவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து உள்ளூர் நாணயத்தாள்கள் மற்றும் இரண்டு வெளிநாட்டு நாணயத்தாள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

சம்பவம் குறித்து புகார் அளித்த பிரிட்டிஷ் பிரஜை ஹட்டன் காவல் துறைக்கு வர வைக்கப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபர் வாங்கிய அட்டைகள் மற்றும் பொருட்களின் மதிப்பைச் சம்பந்தப்பட்ட கடைகளில் இருந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஹட்டன் காவல்துறை தலைமையக தலைமை ஆய்வாளர் ரஞ்சித் ஜயசேன தெரிவித்தார்.

சந்தேக நபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## “அறுவடையை தடுத்தவர்கள் நட்டஈடு தர வேண்டும்”

இதனால் இன்று மழை வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதைத் தடை போட்டவர்களே அதற்கான நஷ்ட ஈடு தர வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீரற்ற கால நிலை காரணமாக இரு தினங்களாகப் பெய்து வரும் கனமழையால் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஊடகங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (19) இவ்வாறு தெரிவித்துள்ளனர்

2024-2025 ஆண்டு பொரும் போக வேளாண்மை செய்கை தொடர்பாக முன்னோடி கூட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நெல் அறுவடை என தீர்மானிக்கப்பட்டு முடிவு எட்டப்பட்டது இருந்தபோதும் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் அறுவடை செய்யும் நிலையில் வேளாண்மை விளைந்துள்ளதுடன் அறக்கொட்டி பூச்சி தாக்கமும் ஏற்பட்டுள்ளது

இருந்தபோதும் அனர்த்த முகாமைத்து வத்தால் எதிர்வரும் 18ஆம் திகதியில் இருந்து கனமழை பெய்யும் விவசாயிகள் அவதானமாகச் செயற்படுமாறு அறிவித்துள்ளனர் இதையடுத்து, அரசாங்க அதிபரைச் சந்தித்து கனமழை வர இருக்கிறது கடந்த 10 நாட்களுக்கு முன்னர் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் பாரியளவில் விளைந்த வேளாண்மை மற்றும் அறக்கொட்டி பூச்சி தாக்கம் ஏற்பட்ட வேளாண்மை அறுவடை செய்ய வேண்டியுள்ளது ஆகவே அறுவடையைச் செய்ய அந்தந்த அமைப்புக்களைத் தீர்மானித்து முடிவெடுக்குமாறு கேட்டுக் கொண்டோம்.

அதற்கு அரசாங்க அதிபர் வாய் மூலமாக ஒரு உத்தரவு தந்தார் அமைப்புகள் ஓம் என்றால் உடனடியாக அறுவடை செய்யுமாறு மழை வெள்ளத்தில் பாதிக்காது செய்யுமாறு தெரிவித்தார். அந்த வகையில் ஒரு விவசாயி அறுவடை செய்ததை ஆரம்பித்ததை அடுத்து அதைச் சிலர் அமைப்புக்கள் என தெரிவித்துக் கொண்டு வேறு பெயர்களைச் சூட்டிக் கொண்டு பச்சைக் காய்களை வெட்டப் போகிறார்கள் என பொய் பிரசாரத்தைத் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து அறுவடை செய்வதைத் தடுத்தனர் என்றுள்ளனர்.

## தடைசெய்யப்பட்ட 21 நிறுவனங்கள்

1. Tiens Lanka Health Care (Pvt) Ltd
2. Best Life International (Pvt) Ltd
3. Mark - Wo International (Pvt) Ltd
4. VML International (Pvt) Ltd
5. [Company Name Not Disclosed]
6. Fast3Cycle International (Pvt) Ltd
7. Sport Chain app, Sport Chain zs Society Sri Lanka
8. OnmaxDT
9. MTFE App, MTFE SL Group, MTFE Success Lanka, MTFE DSCC Group
10. Fastwin (Pvt) Ltd
11. Fruugo Online App/Fruugo Online (Pvt) Ltd
12. Ride to Three Freedom (Pvt) Ltd
13. Qnet
14. Era Miracle (Pvt) Ltd. and Genesis Business School
15. Ledger Block
16. Isimaga International (Pvt) Ltd
17. Beecoin App and Sunbird Foundation
18. Windex Trading
19. The Enrich Life (Pvt) Ltd
20. Smart Win Entrepreneur (Pvt) Ltd
21. Net Fore International (Pvt) Ltd/Netrrix

## ‘ஸ்கை ஸ்டிக்’ வாகனத்தில் வெடித்ததால்...



பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் காயமடைந்து நீர்கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் விலங்கு மற்றும் பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளுக்கு, திங்கட்கிழமை (20) பகல் 11.45 மணியளவில் விமான நிலைய ஓடுபாதைக்கு மேலே வானத்தில் பறவைகள் கூட்டம் பறந்து வருவதாகவும், இதனால் விமான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி, மூன்று அதிகாரிகள் வாகனத்தில் ஓடுபாதைக்குச் சென்று, பறவைக் கூட்டத்தை பயமுறுத்துவதற்காக ஸ்கை ஸ்டிக் போன்ற வெடிபொருட்களைக் கொண்ட துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளனர். அந்த குண்டு வெடிக்காமல், அதிகாரிகள் பயணித்த வாகனத்தின் மீதே விழுந்தது.

அதற்குள், வாகனத்தில் இதுபோன்ற பல ’ஸ்கை ஸ்டிக்’ போன்ற வெடிபொருட்களை இருந்தன, அவை ஒரே நேரத்தில் வெடித்து, திடீரென தீப்பிடித்துள்ளன.

அதே நேரத்தில், கட்டுநாயக்க விமான நிலைய தீயணைப்புத் துறையின் அதிகாரிகள் தீயை அணைக்க பல தீயணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.


இந்த சம்பவத்தின் விளைவாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் விலங்கு மற்றும் பறவை ஆபத்து கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் காயமடைந்து நீர்கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர், மேலும் அதிகாரிகள் பயணித்த கெப் வண்டியும் சேதமடைந்துள்ளது.

## வெள்ளத்தில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (19) அன்று வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துக்கள் எனும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
சேனபுர பகுதியில் திருமணம் முடித்துள்ள வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய றிஸ்வான் எனும் நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

தனது மனைவி மற்றும் உறவினர் ஒருவருடன் அந்நபர் செல்லும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கரப்பொல - முத்துக்கல் வழியாக சேனபுர பகுதிக்கு செல்லும் போது மூவரும் வெள்ளநீரில் அகப்பட்டுள்ளனர்.
அதில், இளம் குடும்பஸ்தர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், அவரது மனைவி மற்றும் மற்றைய நபர் மரக்கிளை ஒன்றினைப் பிடித்து உயிர் தப்பியுள்ளனர்.



மரணமடைந்த நபரின் உடல் மருத்துவப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டு ள்ளதுடன், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பயனாளிகளிடம் கையளிப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் அனுர கருணாதிலக ஆகியோர் இணைந்து கிளிநொச்சியில் உள்ள திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரிக் கிராமத்தை 2025 ஜனவரி 17ஆம் திகதி திறந்து வைத்து 24 பயனாளிக் குடும்பங்களிடம் கையளித்துள்ளனர்.

இந்நிகழ்வில், நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை பிரதி அமைச்சர் டி.பி.சரத்தும் கலந்துகொண்டுள்ளார்.

இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் 600 குடும்பங்கள் மாவட்ட வீடமைப்பு குழுக்களால் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு வீடுகளை வழங்குவதனை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 24 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் அமைக்கப்படுவதே இத்திட்டமாகும்.

இத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், கண்டி, கம்பஹா, அனுராதபுரம், பதுளை, மாத்தளை, புத்தளம், கொழும்பு, திருகோணமலை, மொனராகலை ஆகிய 12 மாவட்டங்களில் மாதிரிக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் 96 வீதத்துக்கும் அதிகமானவை நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.














## நெல் கொள்வனவாளர்கள்
# தராசில் மோசடி

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி- பரந்தன், குமரபுரம் பகுதியில் திங்கட்கிழமை (20) அன்று விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்ட போது, கொள்வனவாளர்களால் செய்யப்பட்ட மோசடியை பொது மக்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நெல் கொள்வனவுக்காக பாரவூர்தியில் வருகை தந்த குழுவினர் பரந்தன் பகுதியில் நெல் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, பொது மக்களுக்கு அவர்களின் தராசு மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தராசு பொது மக்களால் கைப்பற்றப்பட்ட சோதனையிட்ட போது, ஒரு உரப்பை நெல் மூட்டைக்குப் பத்து கிலோ கிராம் குறைவாகக் காட்டும் வகையில் தராசு மாற்றப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஏற்றப்பட்ட நெல் இறக்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்குச் சென்று பொலிஸார், விவசாயிகளின் முறைப்பாட்டைப் பதிவு செய்ததோடு, பிரிதொரு தராசில் நெல் மீளவும் நிறுக்கப்பட்ட போது, ஒரு விவசாயியிடமிருந்து சுமார் 24 ஆயிரம் ரூபாவுக்கு குறைத்துக் காட்டப்பட்டு நெல் கொள்வனவு செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு அப் பணம் மீளவும் விவசாயியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு ஒருபுறம் நோய் தாக்கம் இன்னொரு புறம் அறுவடை நேரத்தில் பெய்கின்ற மழை காரணமாக ஏற்படுகின்ற பாதிப்பு ஏற்படுகின்றன.

இத்தனையும் கடந்து நெல்லை அறுவடை செய்து விற்பனை செய்கின்ற போது, அதற்கான நியாயமான விலை கிடைப்பதில்லை இவ்வாறு பல பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் கொள்வனவாளர் மனசாட்சியின்றி மோசடியான முறையில் நிறைகளைக் குறைத்துக் காட்டி எங்களிடம் மோசடி செய்வது மிகுந்த வேதனையைத் தருகிறது. எனவே, இனிவரும் காலங்களில் நெல் கொள்வனவாளர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



# சான்றிதழ் வழங்கல்





■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு கற்கைகளை நிறைவு செய்து சித்தியடைந்த 89 பேர் தங்களுக்கான தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

# தமிழிசை விழாவும் தலைக்கோல் வழங்கலும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழிசை அறிக்கைகளும், ஆய்வரங்கமும், தலைக்கோல் வழங்கலும் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில், ஜனவரி 24 ஆம் திகதி மாலை 5.00மணிக்கு விழா ஆரம்பமாவதுடன், 25ஆம், 26ஆம் திகதிகளில் காலை 9.30 மணிமுதல் ஆய்வரங்கமும், மாலை 4.30 மணி முதல் இசை அறிக்கைகளும் மற்றும் தலைக்கோல் வழங்கலும் நடைபெறவுள்ளது என பொதுச்செயலாளர் கலாநிதி ஜெ.தற்பரன் அறிவித்துள்ளார்.

# இளம் பெண்ணின் சடலம் மீட்பு



■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காடு புகையிரத கடவையின் அருகில் திங்கட்கிழமை (20) காலை இளம் பெண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி திங்கட்கிழமை (20) அதிகாலை 4.30 மணியளவில் பயணித்த புகையிரதத்தில் குறித்த பெண் மோதி உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாகத் தற்காலிகமாகத் தோட்டக் காட்டில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மரணம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊசி மலைக்குள் விழுந்த டென்மார்க் பிரஜை மரணம்

■ செ.தி.பெருமாள்

சிவனொளிபாதமலைக்கு ஏற்றிக் கொண்டிருந்த டென்மார்க் நாட்டைச் சேர்ந்த 67 வயதுடைய உல்லாச பயணியான ஜெப்டீன் என்பவர், திங்கட்கிழமை (20) காலை 6 45 மணியளவில் ஊசி மலைப்பகுதியில் இருந்து தவறி விழுந்துள்ளார்.

ஊசி மலைப்பகுதியில் உள்ள பொலிஸார், நல்லத்தண்ணி நகருக்கு அவரை தூக்கி வந்து அவசர அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தது்ள்ளார் என நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.




# சிறுமி வன்புணர்வு; ஒருவர் கைது

தம்பகல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மரியாராவ கொல்லதேனி பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திவிட்டு தலைமறைவாக இருந்த சந்தேக நபர் சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மரியராவ கொல்லதெனியா பள்ளிக்கு அருகிலுள்ள தம்பகல்லவில் வசிக்கும் 24 வயதுடையவர்.

24/09/2023 அன்று, தம்பகல்ல, கஹகொல்லவைச் சேர்ந்த 15 வயது சிறுமி ஒருவர் தனது வீட்டில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, அந்தப் பகுதியை விட்டு ஓடிப்போய், காவல்துறையினரிடமிருந்து தப்பித்துத் தலைமறைவாகியுள்ளார்.

இந்நிலையில், கொழும்பு பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பும் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (20) ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# ஆட்டோ விபத்தில் மூவருக்கு காயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு - சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை(19) மாலை இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் பவுசர் வண்டியின் பின் பக்கமாக ஆட்டோ மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மாஞ்சோலை பகுதியைச் சேர்ந்த குடும்பத்தாருடன் ஆட்டோவில் ஏறாவூர் பகுதிக்குச் சென்று ஊர் திரும்பிச் செல்லும் போதே இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதில், ஆட்டோவைச் செலுத்தி வந்த நபர் சந்திவெளி




வைத்தியசாலையிலும், ஆட்டோவில் பயணித்த இரு பெண்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அனைவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நடமாடும் சேவை ஒத்திவைப்பு

■ வி.ரி.சகாதேவராஜா

மனித அபிவிருத்தி தாபனமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து செவ்வாய்க்கிழமை(21) நடைபெவிருந்த நடமாடும் சேவை, கனமழையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உதவி இணைப்பாளர் எம்.ஐ.றியாழ் தெரிவித்துள்ளார்.

அந்த நடமாடும் சேவை எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடமாடும் சேவை காரைதீவு பிரதேச செயலாளர் ஜி.அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் பி.ப 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

# கட்டணங்கள் குறைந்ததும் விலைகளில் மாற்றம் வேண்டும்

மின்சாரக் கட்டணத்தை இருபது சதவீதம் குறைக்க பொதுப் பயன்பாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்ததும், அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த வலுசக்தி அமைச்சகம் ஒப்புதல் அளிக்கவேண்டும். அதன்படி, நீண்ட காலமாகப் பிரச்சினையாக இருந்த மின்சாரக் கட்டணத்தில் மக்கள் குறிப்பிடத்தக்க நிவாரணத்தைப் பெற முடிந்தது ஆச்சரியமல்ல.

இந்த மின்சாரக் கட்டணக் குறைப்புச் சலுகையின் கீழ், வீட்டு மின் கட்டணங்கள் 20 சதவீதமும், வழிபாட்டுத் தலங்களில் மின் கட்டணங்கள் 21 சதவீதமும், தொழில்துறை துறையில் மின் கட்டணங்கள் 30 சதவீதமும், ஹோட்டல் துறையில் மின் கட்டணங்கள் 31 சதவீதமும் குறைக்கப்பட்டன.

இலங்கையில் நடைமுறையில் உள்ள மின்சாரச் சட்டத்தின்படி, மின்சாரக் கட்டணங்களை நிர்ணயிக்கும் அதிகாரம் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையத்திடம் உள்ளது, மேலும் வலுசக்தி அமைச்சு அதன் பரிந்துரைகளைச் செயல்படுத்தக் கடமைப்பட்டுள்ளது.

மின்சாரம் வழங்குவது என்பது ஒரு வலையமைப்புடன் தொடர்புடைய ஒரு விரிவான செயல்முறையாகும். வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் உட்பட எந்தவொரு இடத்திற்கும் மின்சாரம் வழங்கப்படும்போது, ஒரு சிக்கலான செயல்முறை நடைபெறுகிறது. எனவே, வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய இறுதி கட்டணம், அந்த வலையமைப்புக்குள் நிகழும் அனைத்து செயல்முறைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

மின்சாரக் கட்டணங்களைக் குறைக்கும் செயல்முறைக்காக ஏராளமான தந்தைகள் பிறந்தன. "நாங்களும் அதைச் செய்யப் போகிறோம்" என்று ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் அனைவரும் தெரிவித்தனர்.

"இது அரசாங்கத்தின் வேலை அல்ல, ஆணையத்தின் வேலை" என்று கூறி பல்வேறு அறிக்கைகள் மற்றும் ஊடகங்களிலும் சமூக ஊடகங்கள் என்பவற்றில் பரவின.

முந்தைய நிர்வாகத்தின் போது, மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க முன்மொழிந்த பொதுப் பயன்பாட்டு ஆணையத் தலைவரை வீட்டிற்கு அனுப்ப முயன்ற பல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள், இந்த விஷயத்தில் அறிக்கைகளை வெளியிட்டிருப்பது முரண்பாடாக இருந்தது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது நல்லதுதான். ஆனால், அதற்கான செலவு மிக அதிகம். அது பில்லியன் கணக்கான ரூபாய்கள். தீர்ந்துபோன திறைசேரியில் இருந்து பில்லியன் கணக்கான ரூபாய்களை ஒரே நேரத்தில் விடுவிப்பது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

எப்படியிருந்தாலும், மின்சாரக் கட்டணங்களைக் குறைத்து பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவது மிகவும் முற்போக்கான அரசியல் முடிவாகும்.

அதனால், மின்சாரத்துடன் தொடர்புடைய ஏனைய கட்டணங்களை அந்தந்த துறைகளைச் சார்ந்தோர் குறைக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இல்லையேல், கட்டணங்கள் குறைக்கப்பட்டாலும் விலைகளில் மாற்றமில்லை எனில், அதனால், யாருக்கும் பிரயோசனமும் இல்லை.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியபடியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களுக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும். சில விஷயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது, அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல. வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கி விடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்

நன்றி–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# நீர் முகாமைத்துவம் எங்கே?

மொஹமட் பாதுஷா

இலங்கையில் நீர் முகாமைத்துவம் என்ற ஒரு விடயம் நடைமுறையில் இருக்கின்றதா? என்ற கேள்வி மாறி மாறி வருகின்ற வறட்சி காலங்களிலும் வெள்ள அனர்த்த நேரங்களிலும் மக்களுக்கு எழுவதுண்டு. "ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் மழை இல்லை, நீரேந்தும் பகுதிகள் காய்ந்து போயுள்ளன. எனவே, நீர்ப் பாசனத்திற்கோ மின் உற்பத்திக்கோ நீர் இல்லை" என்று கூறுகின்றார்கள். ஆனால், நான்கைந்து நாட்கள் மழை பெய்தால், "இதோ நீர் மட்டம் அதிகரித்து விட்டது" என்று கூறி இரவோடிரவாக வான் கதவுகளை திறந்து விடுகின்றார்கள்.

இதுதான் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. கிடைக்கின்ற நீரை முகாமைத்துவம் செய்து பெருமளவு வறட்சி ஏற்படாமலும், வெள்ளப் பெருக்கோ, அணைக்கட்டு உடைப்பெடுக்கும் நிலையோ உருவாகாமலும் முன்கூட்டியே பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள ஏன் இலங்கை அரச இயந்திரத்தினால் முடியாமல் போகின்றது?

மழை வீழ்ச்சி குறைவான காலத்தில் நீர்ர்பாசனத்திற்கோ குடிநீருக்கோ அல்லது மின் உற்பத்திக்கோ நீர் இல்லை என்று அறிவிப்பதற்கும், பின்னர் நீர்த் தேக்கங்கள் வழியத் தொடங்கும் போது திறந்து விடுவதற்கும் ஒரு அமைச்சும், அதிகாரிகளும் தேவைதானா என்ற கேள்வி சாதாரண மக்களுக்கு எப்போதும் உள்ளது.

இலங்கையில் 34 அணைக்கட்டுக்கள் உள்ளன 16 பெரிய ஆறுகளும் 25இற்கு மேற்பட்ட சிறிய ஆறுகளும் உள்ளன. அதுமட்டுமன்றி, பாராக்கிரம சமுத்திரம், சேனநாயக்க சமுத்திரம் உள்ளடங்கலாக எண்ணிலடங்கா நீர்த் தேக்கங்களும் இருக்கின்றன.

இலங்கையின் பருமனுடன் ஒப்பிடுகையில் நமக்கிருக்கின்ற குளங்கள், நீர்த் தேக்கங்கள், அணைக்கட்டுக்கள் போதுமானவை. ஆனால், நீரை முகாமைத்துவம் செய்வதில்தான் வினைத்திறனற்ற நடைமுறைகளும் ஏனோ தானோ என்ற அணுகுமுறைகளும் பின்பற்றப்படுவதாகத் தெரிகின்றது.

நீர் கிடைக்கின்ற போது அதனை ஓரளவுக்குச் சேமித்து வைத்து, தேவையான காலத்தில் அதனை வழங்குவதிலும், வெள்ளப் பெருக்கு ஏற்படாமலோ தடுப்பதிலும் நீர்ப்பாசன திணைக்களமும் நீர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அதிகாரிகளும் அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பும் வெற்றிகரமாகச் செயற்பட்டதாகத் திருப்தி கொள்ள முடியாத நிலையே உள்ளது.

ஒரு மழைக்காலம் முடிவுக்கு வந்து சில நாட்களிலேயே நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் இல்லை என்று கூறப்படுகின்றது. நீர்ப் பாசனத்தை வழங்க முடியாது என்றும் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டி ஏற்படலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இதனால் மக்கள் வறட்சியால் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க விளைச்சல் நிலங்கள் நீரில்லாமல் வறண்டு போகின்றன. இது இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியைப் பாதிக்கின்றது.

பின்னர் மழை பெய்யத் தொடங்கி சில நாட்களிலேயே நீர்மட்டம் அதிகரித்து விட்டது என்று அறிவிக்கப்படுகின்றது. நீர்த் தேக்கங்கள் அல்லது அணைக்கட்டுகளில் கிட்டத்தட்ட நீர் வழிய எத்தனிக்கும் தறுவாயில் வான் கதவுகளும் நீர்ப்பாசன கதவுகளும் திறந்து விடப்படுகின்றன.

இந்த நடைமுறை எதிர்பாராத வெள்ள நிலைமையை ஏற்படுத்துவதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைச்சல் நிலங்கள் அழிவடைனின்றன. குடியிருப்புக்களை விட்டு மக்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பாடசாலைகளை, கல்விக் கூடங்களை மூட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. திட்டமிடாத செயற்பாடுகளால் அனர்த்த நிலை உருவாகின்றது.

"வானத்தில் இருந்து பொழிகின்ற ஒரு சொட்டு மழைநீரும் வீணாகக் கடலில் கலக்கக் கூடாது" என்று பராக்கிரமாகு மன்னன் சொன்னான். இப்படியான நூரநோக்கின் அடிப்படையிலேயே ஏனைய பல நீர்ப்பாசன திட்டங்களும், குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளும் அமைக்கப்பட்டன என்பதை அறிவோம்.

ஆனால், பராக்கிரமபாகுவை பல விடயங்களில் பின்பற்றுகின்ற ஆட்சியாளர்கள் நீரை முகாமைத்துவம் செய்வதில் ஏன் பின்பற்றுவதில்லை என்று தெரியவில்லை. தொடர் வறட்சியும், திடீர் வெள்ள அனர்த்தமும் ஏற்படுவதற்கு நீர் முகாமைத்துவ பொறிமுறையின் வினைத்திறனற்ற செயற்பாடே காரணமாக அமைகின்றது.

ஆறுகளிலிருந்தும் மழை வீழ்ச்சியிலிருந்தும் சேகரிக்கப்படுகின்ற நீரை அணைக்கட்டுக்களில் சேமித்து வைத்து, உரிய காலப் பகுதியில் வயலுக்கும் ஏனைய விளைச்சல் நிலங்களுக்கும் விநியோகிக்க வேண்டும். நீர் மின் உற்பத்திக்கு ஒரு மிதமான அடிப்படையில் திறந்து விடலாம். அதேபோன்று, குடிநீர் சுத்திகரிப்புக்கும் வழங்கலாம்.

இப்போது, வானிலை மற்றும் காலநிலையை முன்கூட்டிக் கணிப்பதற்கான தொழில்நுட்ப வசதிகள் இருக்கின்றன. ஓரளவுக்குக் காலநிலையை எதிர்வு கூற முடியும். அதற்காகவே சில திணைக்களங்கள், பல அதிகாரிகள் கடமையில் உள்ளனர்.

எனவே, வறட்சி அல்லது மழை வீழ்ச்சியின்மை ஏற்படப் போகின்றது என்று தெரிந்தால் அதனைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் பல நாட்களின் முன்னரே படிப்படியாக முன்னெடுக்கப்பட வேண்டும். திடீரென மின் வெட்டையோ, நீர்த் தட்டுப்பாட்டையோ அறிவிப்பது சிறப்பான நீர் முகாமைத்துவம் அல்ல.

அதேபோன்று, மழை வீழ்ச்சி பற்றிய முன்னறிவிப்புக்களும் இப்போது பரவலாகக் கிடைக்கின்றன. எனவே, மழை அதிகமாகப் பெய்யும் என எதிர்பார்க்கப்பட்ட உடனேயே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும்.

நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்களில் நீர்மட்டம் நிரம்பி வழியும் வரையும் காத்திருக்காமல் முன்கூட்டியே மெது மெதுவாகத் திறந்து விட்டால் திடீர் வெள்ள நிலைமையைத் தவிர்க்க முடியும். அழிவுகளையும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மூடப்படுவதையும் நிறுத்த முடியும்.

இங்கே ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது ஒரு நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு எந்த மட்டத்தை அடைந்த பிறகு கட்டாயமாக வான் கதவுகளைத் திறக்க வேண்டும் என்று ஒரு நிலையியற் கட்டளை இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

உதாரணமாக 110 அடி உயரமான சேனநாயக்க சமுத்திரத்தின் நிலையியற் கட்டளை 106 அடிகள் என சொல்லப்படுகின்றது.

நீர்த் தேக்கங்களின் இந்த நியம மட்டத்தைக் குறைப்பது பற்றி அரசாங்கமும் துறை சார்ந்தவர்களும் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. ஏனென்றால், நிலையியற் கட்டளையின் படி வான் கதவுகளைத் திறந்தாலும், தீவிர மழையினாலும், திறந்து விடப்படும் நீரினாலும் சில மணிநேரங்களுக்குள்ளேயே வெள்ளம் ஏற்படுவதை அனுபவத்தில் காண்கிள்றோம்.

வறட்சியால் மக்களும் விளைச்சல் நிலங்களும் வறண்டு போவது போதாது என்று, திடீர் வெள்ளத்தினாலும் நீர்த் தேக்கங்கள் கடைசித் தருணத்தில் திறந்து விடப்படுவதாலும் நாடு முழுக்க கடந்த சில வருடங்களில் கடுமையான அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

நீர்த்தேக்கங்கள் உடைப்பெடுக்க முன்னர் அவற்றைத் திறந்து விடுவது பல அழிவுகளைத் தடுக்கும் நடவடிக்கை என்பதை மறுக்க முடியாது.

ஆயினும், அப்படித் திறந்து விட்டும் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. ஊர்கள் தாழ்கின்றன. பாடசாலைகள், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி வளாகங்களை மூட வேண்டி ஏற்படுகின்றது.

இது தவிர, அரிசிக்கே இப்போது தவம் கிடக்கும் நமது நாட்டில் இலட்சக்கணக்கான ஏக்கர் விளைச்சல் நிலங்கள் அழிவடைகின்றன. மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவையெல்லாம் நீர் முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடு என்பதை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நீர் முகாமைத்துவம் என்ற விடயத்தில் விவசாயத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வடிகாலமைப்பு சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், அனர்த்த முகாமைத்துவ நிலையம் என பல தரப்பினர் தொடர்புபடுகின்றனர்.

வீதிகள் நீர் வழிந்தோடக் கூடிய வசதியுடன் அமைக்கப்பட வேண்டும். பாலங்கள், மதகுகள் தேவையற்ற விதத்தில், அரசியல் காரணங்களுக்காக அகற்றப்படுவது தடுக்கப்பட வேண்டும். வடிகாலமைப்பு சீராகப் பராமரிக்கப்பட வேண்டும்.

விரைவான நீரோட்டத்திற்குத் தடையாக அமைகின்ற அனைத்தும் அகற்றப்பட வேண்டும். ஏன், மக்களும் கூட நீர் வழிந்தோடும் இடங்களை மண்ணிட்டு நிரப்பி தடை ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறான இடங்களில் சட்டவிரோத தடைகளை ஏற்படுத்துவோர் தண்டிக்கப்பட வேண்டும். இதுவெல்லாம் நீர் முகாமைத்துவத்திற்குள்ளேயே வருகின்றது எனலாம்.

இலங்கை ஒரு சிறிய நாடு நமக்குக் கிடைக்கின்ற நீரைச் சரியாக முகாமைத்துவம் செய்தால் ஓரளவுக்கு வறட்சியில் இருந்தும், திடீர் வெள்ளப் பெருக்கிலிருந்தும் நாட்டைப் பாதுகாக்க முடியும். அதனை இனிமேலாவது வினைத்திறனாகச் செய்வதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கடிதங்கள்

## அழையுங்கள்

சாய்ந்தமருது பிரதேச பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி மூலமான முறைப்பாட்டினை தொடர்ந்து, அதன் உண்மைத் தன்மையை அறிய சாய்ந்தமருதின் உணவு கையாளும் சில நிறுவனங்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதனின் வழிகாட்டலில் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.எம். நிஸ்தாரினால் பரிசீலனை செய்யப்பட்டு சுகாதார சீர்கேடான உணவகங்களுக்கு எச்சரிக்கையும், அறிவுறுத்தலும் கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் தொடக்கம் அனுமதிப்பத்திரம், ஊழியர் வைத்திய சான்றிதழ் இல்லாத மற்றும் முறையான கழிவு நீர் தொட்டி இல்லாத , குளிர்சாதனப் பெட்டிகள் முறையாகப் பராமரிக்காத, தனிநபர் சுகாதாரம் பேணாத, உணவு தயாரிக்கும் இடங்களைச் சுகாதாரமாகப் பேணாத உணவகங்கள், பேக்கரிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதுடன் மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்பும் ஆகும். ஆகவே பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் 0753333453, 0776702703 , 0706702709 எனும் இலக்கங்களுக்கு அறியத்தருமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

- நூருல் ஹுதா உமர்














சர்ச்சைகளுக்கு மத்தியில்

# திருவள்ளுவர் சிலை திரை நீக்கம்

பாறுக் ஷிஹான்

நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில், அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிட்டங்கி வீதியில் அமைந்துள்ள கல்முனை தமிழர் கலாசார பேரவை வளாகத்தில் குறித்த சிலை பொலிஸாரின் பாதுகாப்பிற்கும் மத்தியில் ஞாயிற்றுக்கிழமை (19) மாலை உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மற்றும் வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை உறுப்பினர்கள் உட்பட கல்முனை பிராந்திய இளைஞர் அமைப்புகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிலையை அகற்ற மாநகர சபை அறிவுறுத்தல்

அத்துடன் கல்முனை பகுதியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை அனுமதியற்ற கட்டுமானம் என குறிப்பிட்டு ஏழு (7) நாட்களுக்குள் அகற்ற மாநகர சபை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவையால் ஞாயிற்றுக்கிழமை(19) கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை வளாகத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட உள்ளதாகவும் அந்த திறப்பு விழாவுக்கான அழைப்பிதழில் கல்முனை மாநகரசபை ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி கௌரவ அதிதியாகக் கலந்து கொள்ள உள்ளதாகவும் அச்சிடப்பட்டிருந்த நிலையில் கல்முனை மாநகர சபையினால் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவை செயலாளருக்கு முகவரியிட்டு வெள்ளிக்கிழமை(17) "கல்முனை கல்லடிக்குளப் பிரதேசத்தில் அனுமதியற்ற கட்டுமானம் என்ற தலைப்பில் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் எமது KMC/Eng/App/2023 ஆம் இலக்க 2023.04.25 ஆம் திகதிய மற்றும் KMC/WD/COMP/10 ஆம் இலக்க 2023.09.07 ஆம் திகதிய கடிதங்களுக்கு மேலதிகமாக, தாங்கள் மேற்படி இடத்தில் கட்டுமானம் ஒன்றை மேற்கொண்டுள்ளமையும், சிலை ஒன்றை அமைத்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த கட்டுமானம் மற்றும் சிலை வைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக கல்முனை பிரதேச செயலகத்திலிருந்து காணி தொடர்பான அனுமதிப்பத்திரத்தினையும், கல்முனை மாநகர சபையினூடாக நிர்மாணத்தினை மேற்கொள்வதற்குரிய அனுமதியினையும் பெற்ற பின்னரே குறித்த குறித்த காணிக்குள் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுமாறு ஏற்கெனவே மேற்குறித்த கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஆகவே, இவ்வறிவுறுத்தல் கிடைக்கப்பெற்று ஏழு (7) நாட்களுக்குள் தங்களால் அனுமதியின்றி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளை அகற்றி ஆதனத்தினை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவருமாறு வேண்டப்படுகின்றீர். தவறும் பட்சத்தில் தங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதனை அறியத்தருகின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலை திரை நீக்கம்- நீதிமன்ற தடையுத்தரவு

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் முறைப்பாட்டிற்கமைய கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் அஹமட்லெப்பை நாதீர் கல்முனை கல்லடி நில குளத்தில் கல்முனை மாநகர சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை திறப்புவிழா நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து கல்முனை தமிழ் காலாசார பேரவைத் தலைவர் செயலாளர் உபதலைவர் ஆகியோருக்கு 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை பிரிவு 106(1)இன் கீழான தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த சட்டவிரோத கட்டுமான நடவடிக்கையால் பல்லின இனங்கள் வாழும் இப்பிரதேசத்தில் இனமுறுகல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் குறித்த குறித்த திறப்பு விழாவினை உடனடியாக தடை செய்து கட்டளை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளபடியால் மேற்குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு குறித்த திறப்புவிழா நடவடிக்கைகளை இன்றிலிருந்து 14 நாட்களுக்குத் தடைசெய்கின்ற விதமாக இத்தால் உமக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், குறித்த சிலை திறப்பு விழாவுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை அமைந்துள்ள காணிக் குத்தகை முறையான விதத்தில் இல்லையென்றும் அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கள் அனுமதியில்லாத முறையற்ற விதத்தில் அமைந்துள்ளமை தொடர்பில் விமர்சனங்கள் எழுந்து வண்ணம் இருக்கும் நிலையில் இப்போது இந்த விடயம் பேசுபொருளாக மாறியுள்ளது.

# இரும்பு கை மாயாவி

ரஜினிகாந்த் நடிப்பில் 'கூலி' திரைப்படத்தை லோகேஷ் கனகராஜ் தற்பொழுது இயக்கி வருகிறார். திரைப்படத்தின் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

'கூலி' திரைப்படத்தில் ரஜினியுடன் சத்யராஜ், ஸ்ருதிஹாசன், நாகர்ஜூனா, உபேந்திரா, அமீர்கான், சௌபின் சாஹிர் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில் லோகேஷ் கனகராஜ் பல நேர்காணலில் இரும்பு கை மாயாவி என்ற திரைப்படம் குறித்து கூறியுள்ளார். அத்திரைப்படமே அவரின் டிரீம் ப்ராஜக்ட் எனவும் கூறியுள்ளார்.

இப்படத்தில் சூர்யா நடிக்க இருப்பதாகத் தகவல் வெளியானது. ஆனால், தற்பொழுது இப்படத்தில் பொலிவூட் நட்சத்திர நடிகரான அமீர்கான் நடிக்க இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சூப்பர் ஹீரோ திரைப்படமாக இரும்பு கை மாயாவி தொடர்பில் அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.



# சூர்யாவால் வருத்தப்படும் இயக்குநர் கௌதம்

திரைப்படங்களில் நடித்துக் கொண்டே, மம்மூட்டி நடிக்கும் மலையாள திரைப்படமான டோமினிக் அண்ட் தி லேடிஸ் பர்ஸ் என்ற திரைப்படத்தை இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன், இயக்கியுள்ளார்.

இது தொடர்பில் நேர்காணல் ஒன்றில் கௌதம் மேனன் கூறியதாவது, "துருவ நட்சத்திரம் திரைப்படத்திற்கு சூர்யா ஒகே சொல்ல யோசித்திருக்கக் கூடாது. அவர் அந்த திரைப்படத்துக்கு ஒகே சொல்ல வில்லை.

அவரை வைத்து நான், காக்க காக்க மற்றும் வாரணம் ஆயிரம் என இரண்டு மெகா ஹிட் திரைப்படத்தை இயக்கியுள்ளேன். மூன்றாவதாக நான் துருவ நட்சத்திரம் கதையைக் கூறும் போது அவர் யோசித்தார். அவர் என்னை நம்பி இருக்கலாம். நான் தான் அப்படத்தை தயாரிக்கிறேன். நஷ்டம் வந்தாலும் அது எனக்கு தான். அப்படி இருந்தும், அப்படத்தின் கதையை அவர் தெரிவு செய்யவில்லை.

இரண்டு திரைப்படம் ஒன்றாக பணியாற்றி விட்டோம் மூன்றாவதாக இந்த திரைப்படத்தில் என்ன தப்பாகிவிட போகுது? அந்த திரைப்படம் நடக்கவில்லை என்றாலும், அவர் இந்த திரைப்படத்துக்கு நோ சொன்னது எனக்கு மிக வருத்தம்" என கூறியுள்ளார்.

# 'பிரேமலு 2'



கடந்த வருடம் வெளியாகி வெற்றிப்பெற்ற 'பிரேமலு' திரைப்படத்தின் இரண்டாம் பாகமான'பிரேமலு 2' படப்பிடிப்பு பணிகள் ஜூன் மாதம் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

காதல், நகைச்சுவை கதைக்களத்தில் உருவான 'பிரேமலு' உலகளவில் ரூ.136 கோடி வசூல் செய்து, கடந்த ஆண்டின் அதிக வசூல் செய்த இந்தியப் படங்களில் ஒன்றாக உள்ளது.

படத்தில் எந்த ஒரு நட்சத்திரங்களும் இல்லாமல், புதுமுகங்கள் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தனர். வெறும் 3 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் அதன் பட்ஜெட்டை விட 45 மடங்கு அதிக இலாபத்தை பெற்றிருக்கிறது.

கிரிஷ் ஏ.டி இயக்கிய இப்படத்தில் நஸ்லென் மற்றும் மமிதா பைஜு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர்.

இப்படத்தின் வெற்றியைத்தொடர்ந்து, 2ஈம் பாகத்தைப் படக்குழு அறிவித்தது. அதனுடன் இப்படம் இந்த வருடம் வெளியாகும் என்றும் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், பிரேமலு 2 படத்தின் படப்பிடிப்பு பணிகளை ஜூன் மாதம் தொடங்க இருப்பதாகவும் திரைப்படத்தை இந்தாண்டு டிசெம்பர் மாதம் வெளியிடப்போவதாகவும் படத்தில் தயாரிப்பாளர் கூறியுள்ளார்.



# மிர்ச்சி சிவா நடிக்கும் 'பறந்து போ'

'பறந்து போ' என்ற திரைப்படத்தை பிரபல இயக்குநர் ராம் இயக்கியுள்ளார். இப்படத்தில் மிர்ச்சி சிவா முன்னணி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இதில் கிரேஸ் ஆண்டனி, அஜு வர்கீஸ் உள்ளிட்ட பலர் நடித்து வந்தார்கள். யுவன் இசையமைக்கும் இந்த படத்தின் ஓடிடி உரிமையை டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் பெற்றுள்ளது.

இப்படத்தினை திரைப்பட விழாக்களுக்கு அனுப்ப விண்ணப்பித்த நிலையில், அதன்மூலம் இந்த தகவல் இணையத்தில் புகைப்படத்துடன், வெளியாகி இருக்கிறது.

முழுக்க கொமெடி பின்னணியில் இப்படத்தினை உருவாக்கி வருகிறார் இயக்குநர் ராம். ஒரு பிடிவாதமாக இருக்கும் சிறுவனுக்கும் பணம் கஷ்டத்தில் இருக்கும் அவனது தந்தைக்கும் ஒரு பயணத்தின் போது இருவரும் சந்திக்கும் மனிதர்களின் மூலம் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் சூழல் ஏற்படுகிறது. இதனை மையமாக வைத்து கதைக்களம் அமைக்கப்பட்டுள்ளது. திரைப்படம் தற்பொழுது நடைப்பெற்று வரும் சர்வதேச ரோட்டர்டாம் திரைப்பட விழாவில் திரையிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கோடி பார்வைகளை கடந்த 'விடாமுயற்சி' டிரெய்லர்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், 'விடாமுயற்சி' என்ற படத்தில் நடித்துள்ளார். மகிழ் திருமேனி இயக்கிய இப்படத்துக்கு அனிருத் இசையமைத்திருக்கிறார்.

இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இப்படம் பொங்கல் அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர் பிற்போடப்பட்டது. பின்னர், அஜித் நடித்த மற்றொரு படமான 'குட் பேட் அக்லி' ஏப்ரல் 10ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டதால், 'விடாமுயற்சி' திரைப்படத்தை பெப்ரவரி 6ஆம் திகதி திரைக்குக் கொண்டு வர தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து, 'விடாமுயற்சி' படத்தின் டிரெய்லர் கடந்த 16ஆம் திகதி வெளியான நிலையில், தற்போது 'விடாமுயற்சி'படத்தின் டிரெய்லர் 10 மில்லியன் (1கோடி) பார்வைகளை கடந்து, தற்போது யூடியூப்பில் டிரெண்டிங்கில் முதல் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சூடான்

# இருளில் மூழ்கியது சூடான்



சூடான் கடந்த 4 நாட்களாக இருளில் மூழ்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சூடானில், இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகிறார்கள். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டு உள்நாட்டுக் கலவரமாக வெடித்துள்ளது.

இதில் அப்பாவி பொதுமக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில், கடந்த 16ஆம் திகதி தலைநகர் கார்டூம் அருகே மியாரோ நீர்மின் நிலையம் மீது துணை இராணுவப்படை வீரர்கள் டிரோன்கள் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளனர். மேலும், அந்த நீர்மின் நிலையம் கடும் சேதத்திற்குள்ளானது. குறிப்பாக நீர்மின் நிலையத்தின் மின்சார சேமிப்பு கலன்கள் வெடித்துச் சிதறியுள்ளன. இதனால் அங்கு மின்சாரம் உற்பத்தி பணி பாதிப்புக்குள்ளாகி மின்தடை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தலைநகரில் உள்ள வீடுகள், கல்வி நிலையங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவை கடந்த 4 நாட்களாக இருளில் மூழ்கியது. நீர்மின் நிலையத்தைச் சீரமைக்கும் பணியில் அந்த நாட்டின் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறார்கள்.

# ஹசனுக்கு சிக்கல்




வங்கதேச கிரிக்கெட் வீரர் ஷாகிப் அல் ஹசன், வங்கதேசத்துக்குள் நுழைந்தால் மக்கள் சும்மா விட மாட்டார்கள் என்ற அச்சுறுத்தல் ஒருபுறம் இருக்க இப்போது வங்கதேச நீதிமன்றம் அவருக்கு பிடிவிறாந்து உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஆனால், இந்தப் பிடிவிறாந்து, பொருளாதாரக் குற்றத்துக்கானது. அதாவது ரூ.3 இலட்சம் மதிப்பிலான காசோலைகள் இதுவரை பவுன்ஸ் ஆகியுள்ளதாக வங்கதேச நீதிமன்றம், ஷாகிப் அல் ஹசனுக்கு பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.


இது தொடர்பாக ஐ.எஃப்.ஐ.சி வங்கி மேலாளர் முகமது ஷஹிபுர் ரஹ்மான் கூறும்போது, “நீதிமன்றம் அவருக்கு சம்மன்களை அனுப்பியது. ஆனால், ஷாகிப் வரவில்லை. இதையடுத்து பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.” என்றார்.

முன்னாள் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு தூக்கி எறியப்பட்ட போது கனடாவில் டி20 ஆடிக்கொண்டிருந்த ஷாகிப் அல் ஹசன், அது முதல் இன்னும் வங்கதேசத்திற்கு திரும்ப முடியவில்லை.

71 டெஸ்ட் போட்டிகள், 247 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 129 டி20 சர்வதேசப் போட்டிகளில் ஆடி ஷாகிப் 712 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இப்போது ஷாகிப் அல் ஹசன் வங்கதேசத்தின் சாம்பியன்ஸ் டிராபி அணியில் இடம்பெறவில்லை. சாம்பியன்ஸ் டிராபியில் வங்கதேசம், இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்கா

## அமெரிக்கா ஜனாதிபதி பதவி விழாவில்
# முதன்முறையாக சீன அதிகாரி பங்கேற்பு



அமெரிக்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு ட்ரம்ப் சீனா, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் சீனா ஜனாதிபதி ஜின்பிங் சார்பில் துணை ஜனாதிபதி ஹான் ஜெங் கலந்துகொள்கிறார். அமெரிக்கா ஜனாதிபதி பதவி ஏற்பு விழாவில் சீன மூத்த அதிகாரி ஒருவர் கலந்து கொள்வது இதேமுதல் முறையாகும்.

இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

# ட்ரம்புடன் அம்பானி சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள ட்ரம்பை இந்தியாவின் பிரபல தொழிலதிபரான முகேஷ் அம்பானி மற்றும் நீடா அம்பானி சந்தித்துப் பேசியுள்ளமை அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளன.

அத்துடன், ட்ரம்ப்புடன் அம்பானி தம்பதி எடுத்த புகைப்படமும் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், 47ஆவது ஜனாதிபதியாக வாஷிங்டனில் உள்ள பாராளுமன்ற கட்டிடமான கேபிடல் அரங்கில், திங்கட்கிழமை (20) பதவியேற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவுக்கு வெளிநாட்டுத் தலைவர்களை அழைப்பது வழக்கம் இல்லை. ஆனால், இந்த முறை ட்ரம்ப் வெளிநாட்டுத் தலைவர்கள் சிலருக்கு, அழைப்பு விடுத்துள்ளார்.

அதேபோல் தொழிலதிபர்கள் பலருக்கும் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார். அந்த வகையில் முகேஷ் அம்பானி, நீடா அம்பானிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் ட்ரம்ப் வைத்த இரவு விருந்தில் பங்கேற்றனர்,

இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவை மேலும் வலுப்பெறும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினர். மேலும், அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகப் பதவியேற்கும் ட்ரம்ப்புக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அவரது ஆட்சிக் காலத்தில் இந்தியா - அமெரிக்கா கூட்டுறவு இருநாடுகளுக்கும், உலகுக்கும் வளர்ச்சியைத் தரும் சாத்தியங்களைக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளனர்.

அமெரிக்கா

# “3ஆம் உலகப் போர் நிகழாமல் தடுப்பேன்”



மத்திய கிழக்கில் நீடிக்கும் குழப்பத்தைத் தீர்த்து வைப்பேன் என தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப், 3ஆம் உலகப் போர் நிகழாமல் தடுப்பேன் எனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்ப் நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக, ஞாயிற்றுக்கிழமை(19) கேப்பிடல் ஒன் அரங்கில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது,

“நமது நாட்டை சரியான பாதையில் கட்டமைக்க வேண்டும். நாளை சூரியன் மறையும் நேரத்தில், நமது எல்லைகள் மீதான படையெடுப்பு நிறுத்தப்படும். அனைத்து சட்டவிரோத எல்லை அத்துமீறல்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பேன். அமெரிக்க மண்ணில் செயற்படும் சட்டவிரோத அன்னிய கும்பல் மற்றும் புலம்பெயர்ந்த குற்றவாளிகளையும் வெளியேற்றுவோம்.

மத்திய கிழக்கில் அமைதிக்கான முதல் படியாக நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடைந்துள்ளோம். கடந்த நவம்பரில் நாங்கள் பெற்ற வரலாற்று வெற்றியின் விளைவாகவே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. உக்ரைன் போரையும் முடிவுக்குக் கொண்டு வருவேன். மத்திய கிழக்கில் நீடிக்கும் குழப்பத்தைத் தீர்த்து வைப்பேன். 3ஆம் உலகப் போர் நிகழாமல் தடுப்பேன்” என்றார்.

புதுடெல்லி

## ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கு:
# விசாரணைக்கு தடை உத்தரவு



காங்கிரஸ் எம்.பியான ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கு தொடர்பான விசாரணைக்கு இந்தி உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.


கடந்த 2019இல் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின்போது, ராகுல் காந்தி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குறித்து பேசியது சர்ச்சையானது.

இதுதொடர்பாக பா.ஜ.க. தொண்டர் நவீன் ஜா என்பவர் ஜார்கண்ட் மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை ஜார்கண்ட் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையி ல், நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையைத் தள்ளுபடி செய்யக் கோரி ராகுல் காந்தி தரப்பில் உச்ச நீதிமன்றம் மனு தாக்கல் செய்யப் பட்டது.

இதையடுத்து, திங்கட்கிழமை (20) விசாரணைக்கு வந்த இந்த வழக்கில், பாதிக்கப்பட்டவர் அல்லாத ஒருவர் எப்படி புகார் அளிக்க முடியும் என்று ராகுல் காந்தி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை, ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கை விசாரிக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# ஒல்மோவுக்கு காயம்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் மத்தியகளவீரரான டனி ஒல்மோ, கெண்டைக்கால் பின்தசைக் காயம் காரணமாக ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவுக்கெதிரான இன்றைய போட்டியைத் தவறவிடுவதாக பார்சிலோனா ஞாயிற்றுக்கிழமை (19) தெரிவித்துள்ளது.

நடப்புப் பருவகாலத்தின் முதற்பாதி வரையிலேயே ஒல்மோ பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், ஸ்பானிய அரசாங்கத்தின் தலையீடு காரணமாக பார்சிலோனாவின் மேன்முறையீட்டு முடிவு வரையில் விளையாடுவதற்கு ஒல்மோ அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# டொட்டமுண்டின் முகாமையாளராக டென் ஹக்?



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் இத்தாலிய சீரி ஏ கழகமான பொலொக்னாவுடனான இன்றைய போட்டியில் தோல்வியடைந்தால் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டின் முகாமையாளரான நுரி சஹினை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் முகாமையாளர் எரிக் டென் ஹக் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



## முதலாவது டெஸ்டில்
# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், முல்தானில் வெள்ளிக்கிழமை(17) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (19) முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 230/10 (துடுப்பாட்டம்: சௌட் ஷகீல் 84, மொஹமட் றிஸ்வான் 71 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேடன் சியல்ஸ் 3/27, ஜோமெல் வொரிக்கான் 3/69, கெவின் சின்கிளேயர் 2/61, குடகேஷ் மோட்டி 1/48)

மே. தீவுகள்: 137/10 (துடுப்பாட்டம்: ஜோமெல் வொரிக்கான் ஆ.இ 31, ஜேடன் சியல்ஸ் 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: நொமன் அலி 5/39, சஜிட் கான் 4/65, அப்ரார் அஹ்மட் 1/6)

பாகிஸ்தான்: 157/10 (துடுப்பாட்டம்: ஷண் மசூட் 52, முஹமட் ஹுரைரா 29, கம்ரான் குலாம் 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோமெல் வொரிக்கான் 7/32, குடகேஷ் மோட்டி 1/48)

மே. தீவுகள்: 123/10 (துடுப்பாட்டம்: அலிக் அதனஸே 55 ஓட்டங்கள். பந்துவீச்சு: சஜிட் கான் 5/50, அப்ரார் அஹ்மட் 4/27, நொமன் அலி 1/42)

போட்டியின் நாயகன்: சஜிட் கான்

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:
# டொட்டென்ஹாமை வென்ற எவெர்ற்றன்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் வென்றது.

எவெர்ற்றன் சார்பாக டொமினிக் கல்வேர்ட்-லூயின், இலிமான் என்டியாயே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோலாகப் பெறப்பட்டிருந்தது. டொட்டென்ஹாம் சார்பாக டெஜன் குலுவென்ஸ்கி, றிஷலிஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது. யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ப்ரூனோ பெர்ணாண்டஸ் பெற்றார். பிறைட்டன் சார்பாக யங்குபா மின்டெஹ், கரூ மிடோமா, ஜோர்ஜினோ ருட்டர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது.

44 புள்ளிகளுடன் ஆர்சனலும், நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் இரண்டாம், மூன்றாமிடங்களில் முறையே ஆர்சனலும், பொரெஸ்டும் காணப்படுகின்றன. தலா 38 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், நியூகாசில் யுனைட்டெடும் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் நான்காம், ஐந்தாமிடங்களில் முறையே சிற்றி, நியூகாசில் ஆகியன காணப்படுகின்றன. இதில் லிவர்பூல் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 21, ஜனவரி 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.